**தேசிய சிறுவர் அபிவிருத்தி நிதியம் - 2016**

------------------------------------------------------------------------------------------

தேசிய சிறுவர் அபிவிருத்தி நிதியத்தின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானச் செலவினக் கணக்கு மற்றும் ஏனைய விளக்கமளிக்கும் தகவல்களினது பொழிப்புக்களை உள்ளடக்கிய 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மேற்குறித்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிதியத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிதியத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு என்னால் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள கணக்காய்வுச் சான்றுகள் போதியளவும் பொருத்தமானதும் என நான் நம்புகின்றேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 அபிப்பிராயம்

நிதிக்கூற்றுக்கள் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சிறுவர் அபிவிருத்தி நிதியத்தின் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிச் செயலாற்றலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்கள்

இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியம இலக்கம் 02 இன் பிரகாரம் மீளாய்வாண்டிற்குரித்தாக காசுப்பாய்ச்சல் கூற்று தயாரிக்கப்பட்டு நிதிக் கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் படி, 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதியத்தின் நிதி விளைவுகள் ரூபா 1,996,766 மிகையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 1,987,857 ஆனமையால் முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 8,909 தொகையான அதிகரிப்பு காணப்பட்டது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

தேசிய சிறுவர் அபிவிருத்தி நிதியத்தின் வழிகாட்டல் கோவையின் பிரகாரம் சிறுவர் அபிவிருத்தி நிதியத்தினை தாபித்ததன் பிரதான நோக்கம் யுத்த சூழ்நிலைகள் மற்றும் ஏனைய இயற்கை அனர்த்தங்களினால் தமது பெற்றோர்களையோ பாதுகாவலர்களையோ இழந்த பிள்ளைகள் உட்பட பொருளாதர பிரச்சினைகளால் தமது கல்வி நடவடிக்கைகளை தொடர்ந்து மேற்கொள்வதற்கும் தேர்ச்சிகள் மற்றும் ஏனைய திறமைகள் என்பவற்றை அதிகரித்துக் கொள்ள முடியாத இலங்கை குழந்தைகளுக்கு நிதி உதவிகள் வழங்குவதாகும். 2014 சனவரி 02 ஆந் திகதிய அப/13/1436/525/008/-1 ஆம் இலக்க அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் கொடி விற்பனையிலிருந்து பெற்றுக்கொள்ளப்படும் நிதியினைப் பயன்படுத்தி அமைச்சரவை விஞ்ஞாபனத்தில் உத்தேசிக்கப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்களை ஆக்கபூர்வமான வகையில் செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய போதிலும், மீளாய்வாண்டில் கொடி விற்பனை மூலமும் நிலையான வைப்புக்கள் முதலீட்டின் மூலமும் பெற்றுக்கொண்ட ரூபா 1,996,166 தொகையான வருமானத்தையும் உள்ளடக்கி ஆண்டின் இறுதியில் காணப்பட்ட ரூபா 4,748,346 தொகை சிறுவர்களுக்கு நன்கொடை கொடுப்பனவிற்காக பயன்படுத்தப்பட்டிருந்தது.

நிதியத்தின் பிரதான வருமான மார்க்கம் சிறுவர் தினக் கொடி விற்பனை வருமானமாக இருந்ததுடன், மீளாய்வாண்டின் சிறுவர் தினத்திற்காக 400,000 அச்சிடப்பட்ட கொடிகள் அனுப்பப்பட்ட 387 பிரதேச செயலகங்களால் 2016 திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் சேகரிக்கப்பட்ட ரூபா 1,307,196 பணத்தை 168 பிரதேச செயலகங்கள் மாத்திரமே

அனுப்பியிருந்தன. 2017 மே மாதம் வரையில் 66 செயலகங்களிலிருந்து பணம் அனுப்பி வைக்கப்பட்டிருக்கவில்லை. அத்துடன் கொடி விற்பனையிலிருந்து ஏதேனும் பணம் சேகரிக்கப்பட்டிருந்தால் அதனைக் கொண்டு வருவதற்கோ அல்லது அது தொடர்பாக ஆராய்ந்து பார்ப்பதற்கோ நிதியத்தினால் போதியளவு நடவடிக்கைகள் எடுக்கப்படாதிருந்ததாக கணக்காய்வின் போது அவதானிக்கப்படவில்லை.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

---

### 5.1 சிறுவர் அபிவிருத்தி நிதியத்தினைக் கலைத்தல்

இந்நிதியத்திற்காக பேணப்படும் வங்கிக் கணக்கினை மூடி அப்பணத்தை நன்நடத்தை சிறுவர் பராமரிப்புத் திணைக்களத்தின் மூலம் பேணப்பட்டு வரும் செவன சரண தாபரிப்பு நன்கொடை முறைமையுடன் தொடர்புபடுத்துவதற்கு திறைசேரியின் செயற்பாட்டு திணைக்களத்தினால் 2017 மார்ச் 24 ஆந் திகதி விசாரிக்கப்பட்டிருந்ததுடன் அது தொடர்பாக அரச நிதித் திணைக்களத்திடமிருந்து அங்கீகாரத்தை பெற்றுக்கொண்டு சமர்ப்பிக்குமாறு திறைசேரியின் செயற்பாட்டு திணைக்களத்தினால் 2017 மே 02 ஆந் திகதிய TOD/BEI/2/BA/120/2015 ஆம் இலக்க கடிதத்தின் மூலம் நிதியத்திற்கு அறிவிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் நிதியத்தினால் கணக்காய்வு திகதியான 2017 மே 09 ஆந் திகதி வரையிலும் அது தொடர்பாக செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட வருமான சேகரிப்பதிலுள்ள தாமதங்கள், சேகரிக்கப்பட்ட பணத்தை விளைவற்ற வகையில் வைத்திருத்தல் மற்றும் நிதியத்தைக் கலைத்தல் தொடர்பாக அமைச்சுச் செயலாளருக்கு அவ்வப்போது அறிவிக்கப்பட்டதுடன் அது தொடர்பில் விசேட கவனம் கோரப்படுகின்றது.